# இறப்பு தீட்டு

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| ஒருவருக்கு | மாமா, மாமி (அத்தை அப்பாவின் அக்காள், தங்கை இறந்தால் | 3 நாள் | - |
| ஒருவருக்கு | சித்தி (அ) பெரியம்மா இறந்தால் | 3 நாள் | - |
| ஒருவருக்கு | விவாஹமான ஸஹோதரி இறந்தால் | 3 நாள் | - |
| பெற்றோருக்கு | விவாஹமான பெண் இறந்தால் | 3 நாள் | - |
| ஒருவருக்கு | ஸஹோதரனின் உபநயனமான பிள்ளை (மருமான்) இறந்தால் | 3 நாள் | - |
| ஒருவருக்கு | பெண் வயிற்றுப் பேரன் இறந்தால் | 3 நாள் | - |
| ஸ்வீகாரம் போன ஒருவனுக்கு | பெற்ற தாய், தந்தை இறந்தால் | 3 நாள் | உபநயனம் ஆனவன் |
| ஒருவருக்கு | 10 நாளைய பங்காளியின் பிள்ளை 3 முதல் 6 வயது வரை | 3 நாள் | - |
| ஒருவருக்கு | அத்தை பிள்ளை, பெண் இறந்தால் | 1 1/2 நாள் | உபநயனம் இல்லா விட்டாலும் |
| ஒருவருக்கு | மாமாவின் பிள்ளை பெண் (அம்மங்கை) | 1 1/2 நாள் | - |
| ஒருவருக்கு | 3 வயதுக்கு மேல் உபநயனம் ஆகாத மருமான், மருமான் இறந்தால் | 1 1/2 நாள் | - |
| ஒருவருக்கு | தாயின் சகோதரியின் சித்தி, பெரியம்மா) பிள்ளை பெண் இறந்தாலும்பெரியப்பா, சித்தப்பாவின் பெண் இறந்தாலும் | 1 1/2 நாள் | விவாஹமான |

ஸ்ரீ ஜகத்குரு டிரஸ்ட்-க்கு வழங்கும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு (80G) உண்டு.

# இறப்பு தீட்டு

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| பிள்ளைக்கு | தாய், தகப்பன் இறந்தால் | 10 நாள் | 11, 12 ஆம் நாள் காரியம் நடக்கும் போது மட்டும் |
| ஒருவருக்கு | பங்காளிகள் இறந்தால் (ஸ்பிண்டர்கள்) | 10 நாள் @ | - |
| அப்பாவுக்கு | ஆண் (அ) பெண் குழந்தை பிறந்த 10 நாட்களுக்குள் இறந்தால் | 10 நாள் | இது பிறப்புத் தீட்டு போய்விடும் இறப்புத்தீட்டு தனியாக கிடையாது |
| ஸஹோதர னுக்கு | தனக்கு ஸஹோதரன் 10 நாட்களுக்குப் பின் இறந்தால், ஸஹோதரி பிறந்து 10 நாட்களுக்குப் பின்னும், விவாஹமாவதற்கு முன்னும், எப்போது இறந்தாலும் (மாற்றாந்தாய் வயிற்றில் பிறந்தவர்களுக்கும் பொருந்தும்) | 10 நாட்கள் | - |
| ஒருவருக்கு | 10 நாள் பங்காளியின் குழந்தை 6 வயதுக்குப் பின் இறந்தால் | 10 நாள் | உபநயனம் பொருந்தும் |
| ஒருவருக்கு | தாயின் தந்தை (அ) தாயின் தாய் இறந்தாலும் | 3 நாள் | - |
| ஒருவருக்கு | மாமனார் மாமியார் இறந்தால் | 3 நாள் | - |

ஸ்ரீ ஜகத்குரு டிரஸ்ட்-க்கு வழங்கும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு (80G) உண்டு.

# இறப்பு தீட்டு

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| பாட்டனுக்கு | பிள்ளையின் பெண் (விவாஹமாகி) இறந்தால், பெண்ணின் பெண் இறந்தாலும் பெண்ணின் பிள்ளை (3 வயதுக்கு மேற்பட்டு உபநயனம் ஆகாமல் இறந்தால்) | 1 1/2 நாள் | - |
| ஒருவருக்கு<br>ஒருவ | தன் மாற்றாந்தாய் வழியில் மாமா, சித்தி, பெரியம்மா, ஸஹோதரி பிள்ளை, பெண், பெண்ணின் பிள்ளை பெண்ணின் பெண் இறந்தால் | 1 நாள் | - |
| ருக்கு | மைத்துனன் இறந்தால் | 1 நாள் | - |
| ஒருவருக்கு | தந்தையின் மாற்றாந்தாய்க்குப் பிறந்த ஸஹோதரன் பெண், ஸஹோதரி, மேற்படியாரின் பெண் பிள்ளை இறந்தால் | 1 நாள் | - |
| ஒருவருக்கு | 3 தலைமுறைக்குட்பட்ட 2 முதல் 6 வயதுள்ள பங்காளி பெண் இறந்தால் | 1 நாள் | - |
| ஒருவருக்கு | குழந்தைகளும் இல்லாமல் மனைவி இறந்த பின் மாமனார், மாமியார் இறந்தால் | 1 நாள் | - |
| ஒருவருக்கு | 10 நாள் பங்காளியின் பெண் 6 வயதுக்குள் இறந்தால் | 1 நாள் | - |
| மைத்துனனுக்கு | அத்திம்பேர் (அக்காள் கணவன்) | ஸ்நானம் மட்டும் | - |

# இறப்பு தீட்டு

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| ஒருவருக்கு | தங்கையின் புருஷன் இறந்தால் | ஸ்நானம் மட்டும் | - |
| மருமானுக்கு | அத்தை புருஷன் இறந்தால் | ஸ்நானம் மட்டும் | - |
| ஒருவருக்கு | மைத்துனி இறந்தால் | ஸ்நானம் மட்டும் | - |
| ஒருவருக்கு | ஷட்டகர் (ஸகலை) இறந்தால், அத்தானின் மனைவி, மாமா பிள்ளையின் மனைவி, சிறிய தாயாரின் பிள்ளையின் மனைவி ஆகியவர் இறந்தால் | ஸ்நானம் மட்டும் | - |

@ 10வது நாள் சாப்பிடுவதற்கு முன் இறந்த செய்தி கேட்டால் அன்று க்ஷவரம் செய்து 11வது நாள் தீட்டு விலகும். (வார நியமம் பார்க்கவும்) 11வது நாள் தாயாதிகள் இறந்த செய்தி கேட்டால் அன்று க்ஷவரம் செய்து மறு நாள் தீட்டு விலகும்

**குறிப்பு**

1. பக்ஷனி (1 1/2 நாள் தீட்டு) என்பது 90 நாழிகை (அதாவது 36 மணி காலம்) இரண்டு பகலும் ஒரு இரவும் (அல்லது) இரண்டு இரவு ஒரு பகலும் சேர்ந்த காலம். பகலில் போஜனம் செய்யாமல் இருந்தால் மட்டுமே தீட்டு கழியும். (செய்தால் மறுநாள் உதயம் வரை தீட்டு உண்டு

**நீர் மோர் விநியோகம் :** வருடா வருடம் கோடைக்காலத்தில் நமது டிரஸ்டின் சார்பாக கோவையில் **கோனியம்மன் தேர் திருவிழாவிற்கு** வரும் பொதுமக்களுக்கு **நீர் மோர் அன்னதானம்** விநியோகம் செய்து வருகிறோம். மற்றும் **பேரூரில் பங்குனி உத்திர தேர் விழாவிற்கு** வரும் பக்த மஹா ஜனங்களுக்கும் **நீர் மோர்** விநியோகம் செய்து வருகிறோம்.

# ஸ்த்ரீகளுக்கு மட்டும் இறப்பு தீட்டு

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் |
|---|---|---|
| ஒரு பெண்ணுக்கு | ஸஹோதரன் (உபநயனமானவன்) இறந்தால் | 3 நாள் |
| ஒரு பெண்ணுக்கு | உபநயனமான மருமகன் (ஸஹோதரன் பிள்ளை) இறந்தால் | 3 நாள் |
| ஒரு பெண்ணுக்கு | மாற்றாந்தாய் இறந்தால் | 3 நாள் |
| ஒரு பெண்ணுக்கு | தனது ஸஹோதரரி, ஸஹோதரரியின் பிள்ளை, பெண் இறந்தால் | 1 1/2 நாள் |
| ஒரு பெண்ணுக்கு | தகப்பனாரின் ஸஹோதரன் இறந்தால் | 1 1/2 நாள் |
| ஒரு பெண்ணுக்கு | மாமா, அத்தை இறந்தால் | 1 1/2 நாள் |
| ஒரு பெண்ணுக்கு | சித்தப்பா, பெரியப்பா இவர்களது பிள்ளை, மாமா பிள்ளை, அத்தை பிள்ளை, இவர்களது பெண்களும் இறந்தால் | 1 1/2 நாள் |
| ஒரு பெண்ணுக்கு | தகப்பன் வழி பாட்டன், பாட்டி, தாய்வழி பாட்டன், பாட்டி, தமையன், தம்பி, இவர்களது பெண் (மருமாள்) இறந்தால் | 1 1/2 நாள் |
| ஒரு பெண்ணுக்கு | மாற்றாந்தாயின் தாய், தந்தை அவர்களின் பிள்ளை, பெண்,ஸஹோதரன், ஸஹோதரி அவர்களுடைய குழந்தைகள் இறந்தால் | 1 1/2 நாள் |
| ஒரு பெண்ணுக்கு | மாமி, அத்தை, புருஷன், ஸஹோதரி புருஷன் இறந்தால் | 1 1/2 நாள் |

**குறிப்பு**

கல்யாணமாகிய ஒரு பெண்ணுக்கு அவளுடைய கணவனுக்கு ஏற்படும் தீட்டுக்கள் அனைத்தும் அவளுக்கும் உண்டு.